நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சாத்தூர்
திரு. சா. வரதராஜன், பி.ஏ., பி.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்.
**குவிமுச பிரிவு 313(1)(ஆ) இன் படியான விசாரணை**

எதிரி–பாலகுமார்

| | | | |
|---|---|---|---|
| 1. | கேள்வி | : | அ.சா.1 சேர்மராஜ், அ.சா.2 பசுபதி, அ.சா.3 மாரிமுத்து ஆகியோர்கள் அவருடைய சாட்சியத்தில் 26.10.2019 ம் தேதி இரவு சுமார் 07.15 – 07.20 மணிளவில் அவர்கள் மூவரும், சாத்தூர் வெள்ளக்கரை ரோடு SSS காம்ப்ளக்ஸ் முன்பாக நின்று பேசிக்கொண்டிருந்த போது சாத்தூர் – கோவில்பட்டி செல்லும் பைபாஸ் ரோட்டில் வழக்கில் இறந்த கருப்பசாமி (அ.சா.1 ன் அப்பா) மேற்கிலுள்ள நெடுஞ்சாலையை கடந்து கிழக்கு நெடுஞ்சாலையில் கிழக்கு ஓரமாக நடந்து வந்துகொண்டிருக்கும்போது வடக்கிலிருந்து தெற்குநோக்கி வந்துகொண்டிருந்த TN 04 K 3370 என்ற பதிவெண் கொண்ட மாருதி காரினை எதிரியாகிய நீர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து கருப்பசாமி மீது மோதியதாக சாட்சியமளித்துள்ளார்கள். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | நான் மெதுவாகத்தான் சென்றேன், அவர் தான் காருக்குள் வந்து விழுந்துவிட்டார். |
| 2 | கேள்வி | : | அ.சா.1 சேர்மராஜ், அ.சா.2 பசுபதி, அ.சா.3 மாரிமுத்து ஆகியோர்கள் மேலும் அவர்களுடைய சாட்சியத்தில், மேற்படி விபத்தில் கருப்பசாமிக்கு வலது காலில் எலும்பு முறிவும், இடது காலில் இரத்தக்காயமும், பின் தலையில் காயமும், முதுகிலும், கையிலும் சிராய்ப்பு காயம் ஏற்பட்டிருந்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்கள். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | அந்த நபருக்கு என்ன காயம் ஏற்பட்டது என்பது எனக்கு தெரியாது |
| 3 | கேள்வி | : | அ.சா.1 சேர்மராஜ், அ.சா.2 பசுபதி, அ.சா.3 மாரிமுத்து ஆகியோர்கள் மேலும் அவர்களுடைய சாட்சியத்தில், காயம்பட்ட கருப்பசாமியை தனியார் அவசர ஊர்தி மூலமாக சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சேர்த்தாகவும், அன்று இரவு 08.00 மணியளவில் காயம்பட்ட கருப்பசாமி சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாகவும், மேற்படி சம்பவத்திற்கு சாத்தூர் நகர் காவல் நிலையம் சென்று புகார் மனு (அ.சா.ஆ.1)ஐ கொடுத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் போது உயிருடன் இருந்தார். |
| 4. | கேள்வி | : | அ.சா.1 சேர்மராஜ் மேலும் தன்னுடைய சாட்சியத்தில், மேற்படி சம்பவத்திற்கு சாத்தூர் நகர் காவல் நிலையம் சென்று புகார் மனு (அ.சா.ஆ.1)ஐ கொடுத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | என் மீது வழக்கு பதிவு செய்தார்கள். |
| 5. | கேள்வி | | அ.சா.4 மாரியப்பன் அவருடைய சாட்சியத்தில் 26.10.2019 ம் தேதி இரவு 10.00 மணியளவில் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் (அ.சா.ஆ.2) தயார் செய்ததாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | | உண்மை |

| | | | |
|---|---|---|---|
| 6. | கேள்வி | : | அ.சா.5–திரு.சதீஸ்குமார் சார்பு ஆய்வாளர் அவருடைய சாட்சியத்தில், 26.10.2019 ம் தேதி 21.00 மணிக்கு சாத்தூர் நகர் காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது சாத்தூர் கீழ காந்தி நகரை சார்ந்த கருப்பசாமி மகன் சேர்மராஜ் என்பவர் அவரது தந்தை விபத்து மூலம் இறந்து விட்டதாக கொடுத்த புகார் மனுவை பெற்று புகார் மனுவின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 558/2019, பிரிவுகள் 279, 304(A) இ.த.ச. ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | என் மீது வழக்கு பதிவு செய்தது உண்மை |
| 7. | கேள்வி | : | அ.சா.5–திரு.சதீஸ்குமார் சார்பு ஆய்வாளர் மேலும் அவருடைய சாட்சியத்தில், 26.10.2019 ம் தேதி 22.00 மணிக்கு இவ்வழக்கின் சம்பவ இடமான சாத்தூர், வெள்ளைக்கரை ரோடு பைபாஸ் பிரிவு கிழக்குபுற தேசிய நெடுஞ்சாலை சென்று சாட்சிகள் வெங்கடேஷ் மற்றும் மாரியப்பன் ஆகியோர் முன்னிலையில் டார்ச் லைட் வெளிச்சத்தில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்கண்ட சாட்சிகளை விசாரணை செய்து அவர்களுடைய வாக்குமூலத்தை பதிவு செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | உண்மை |
| 8. | கேள்வி | : | அ.சா.5–திரு.சதீஸ்குமார் சார்பு ஆய்வாளர் மேலும் அவருடைய சாட்சியத்தில், சேர்மராஜ் என்பவரையும், பார்வை சாட்சிகளான பசுபதி, மாரிமுத்து ஆகியோரை விசாரணை செய்து அவர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்ததாவும் சாட்சியம் அளித்துள்ளார் இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | தெரியாது |
| 9. | கேள்வி | : | அ.சா.5–திரு.சதீஸ்குமார் சார்பு ஆய்வாளர் மேலும் அவருடைய சாட்சியத்தில், 27.10.2019 ம் தேதி சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு காலை 08.00 மணிக்கு சென்று சாட்சிகளுக்கு சம்மன் சார்பு செய்தும், பஞ்சாயத்தார்கள் மற்றும் பிரேத விசாரணை சாட்சிகளான கணேசன், பாண்டியம்மாள், கருப்பசாமி ஆகியோர் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து அறிக்கை தயார் செய்ததாவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | கேள்விபட்டேன். |
| 10. | கேள்வி | : | அ.சா.5–திரு.சதீஸ்குமார் சார்பு ஆய்வாளர் மேலும் அவருடைய சாட்சியத்தில், இவ்வழக்கில் இறந்த கருப்பசாமியின் இறப்பின் காரணம் அறிய சாத்தூர் அரசு மருத்துவர் அவர்களுக்கு பிரேத பரிசோதனைக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்ததாகவும், இவ்வழக்கின் விசாரணையை சாத்தூர் நகர் வட்ட காவல் ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | கேள்விபட்டேன். |
| 11. | கேள்வி | : | அ.சா.6–திரு.சுபக்குமார், காவல் துணை கண்காணிப்பாளர் அவருடைய சாட்சியத்தில் இவ்வழக்கின் தொடர் புலன் விசாரணைக்காக வழக்கு நாட்குறிப்பினை எனது விசாரணைக்கு 03.11.2019 ம் தேதி அனுப்பியதை பெற்றுக்கொண்ட அவர் சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகளை விசாரணை செய்ய சார்பு ஆய்வாளரிடம் கூறியதையே அவரிடமும் கூறியதால் |

| | | | |
|---|---|---|---|
| | | | தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும், இவ்வழக்கின் புகார்தாரரனா சேர்மராஜ் மட்டும் விசாரணை செய்து மறு வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், அன்றைய தினமே பிரேத பரிசோதனை அலுவலுக்கு சென்ற தலைமை காவலர் சரவணன், புகாரினை பெற்று வழக்கு பதிவு செய்து புலன் விசாரணை செய்த சார்பு ஆய்வாளர் சதீஷ்குமார் ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களது வாக்குமூலங்களை பதிவு செய்ததாகவும், சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | தெரியாது |
| 12. | கேள்வி | | அ.சா.6–திரு.சுபக்குமார், காவல் துணை கண்காணிப்பாளர் மேலும் அவருடைய சாட்சியத்தில் எதிரியாகிய உங்களை காரணம் கூறி காவல்நிலையத்தில் வைத்து கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜராக அறிவுறுத்தி இருநபர் ஜாமீனில் விடுவித்ததாகவும், அந்த சமயத்தில் நீங்கள் உங்களது வாகனத்தின் ஆவணங்களை அவரது விசாரணைக்கு ஆஜர் செய்ததை பெற்றுக்கொண்டதாகவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | | விபத்து நடைப்பெற்ற தேதியில் இரண்டு ஜாமீன்தாரர்களை அழைத்துச் சென்றேன். |
| 13. | கேள்வி | | அ.சா.6–திரு.சுபக்குமார், காவல் துணை கண்காணிப்பாளர் மேலும் அவருடைய சாட்சியத்தில், 04.11.2019 ம் தேதி இவ்வழக்கு விபத்தில் சம்பந்தப்பட்ட TN 04 A 3370 என்ற பதிவெண் கொண்ட மாருதி ஆல்டோ நான்கு சக்கர வாகனத்தினை மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வுக்கு அனுப்பி வைத்து, அதை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் கலைச்செல்வி என்பவரை 25.11.2019 ம் தேதி விசாரணை செய்து அவர் வழங்கிய மோட்டார் வாகன ஆய்வறிக்கை கிடைக்கப்பெற்று அவருடைய வாக்குமூலத்தினை பதிவு செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | | என்னுடைய வாகனத்தை ஆய்வு செய்ய மோட்டார் வாகன ஆய்வாளருக்கு கொண்டு சென்றது உண்மை தான். |
| 14. | கேள்வி | | அ.சா.6–திரு.சுபக்குமார், காவல் துணை கண்காணிப்பாளர் மேலும் அவருடைய சாட்சியத்தில், வழக்கு விபத்தில் காயம்பட்ட கருப்பசாமி என்பவரின் விபத்து பதிவேடு பதிவு செய்த சாத்தூர் அரசு மருத்துவமனை மருத்துவர் செந்தில்கணேஷ் என்பவரை விசாரித்து அவர் வழங்கிய விபத்து பதிவேட்டை கிடைக்கப்பெற்று அவருடைய வாக்குமூலத்தினை பதிவு செய்ததாகவும், இறந்துபோன நபரின் உடலை சடலக்கூராய்வு செய்த மருத்துவர் ஆதில் முகமது என்பவரை விசாரணை செய்து அவர் வழங்கிய சடலக்கூராய்வு அறிக்கை கிடைக்கப்பெற்று மருத்துவரின் வாக்குமூலத்தினை பதிவு செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | | தெரியாது |
| 15. | கேள்வி | : | அ.சா.6–திரு.சுபக்குமார், காவல் துணை கண்காணிப்பாளர் மேலும் அவருடைய சாட்சியத்தில், இவ்வழக்கு விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தின் உரிமையாளரான சுசீலா என்பவரை விசாரித்து அவரின் வாக்குமூலத்தினை பதிவு செய்ததாகவும், அவர் விசாரணையின் போது மேற்படி வாகனத்தினை இந்த வழக்கு எதிரி பாலக்குமாராகிய உங்களுக்கு விற்பனை செய்துவிட்டதாக கூறி வாக்குமூலம் கொடுத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். |

| | | | |
|---|---|---|---|
| | | | இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | நான் வாகனத்தை சுசீலா என்பவரிடமிருந்து தான் வாங்கினேன். |
| 16. | கேள்வி | : | அ.சா.6–திரு.சுபக்குமார், காவல் துணை கண்காணிப்பாளர் மேலும் அவருடைய சாட்சியத்தில், அவருடைய புலன் விசாரணையை முடித்து அவருடைய விசாரணையிலிருந்தும், சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்தும் எதிரியாகிய நீங்கள் உங்களுடைய வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச் சென்று வழக்கு விபத்தை ஏற்படுத்தி கருப்பசாமி என்பவருக்கு இறப்பை ஏற்படுத்திய குற்றம் உண்மை என தெரியவந்ததால் எதிரி பாலக்குமார் ஆகிய உங்கள் மீது 25.11.2019ம் தேதி இ.த.ச பிரிவுகள் 279 மற்றும் 304(A) ன் கீழான குற்றங்களுக்கு இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | விபத்து நடைப்பெற்ற பகுதில் signal இருப்பதால் அந்த பகுதியில் வேகமாக வாகனத்தை ஓட்டிச்செல்ல முடியாது |
| 17. | கேள்வி | : | வழக்கு பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்? |
| | பதில் | : | நான் சாதாரணமாக தான் வாகனத்தை ஓட்டிச் சென்றேன். காயம்பட்ட நபர் மது அருந்திருந்தார் என்று நினைக்கிறேன். |
| 18. | கேள்வி | : | உங்கள் தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் உண்டா? |
| | பதில் | : | இல்லை |

கேள்விகள் என்னால் நேரடியாக எதிரியிடம் கேட்கப்பட்டு, அவர்கள் கூறிய பதில் என்னால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது.

நீதித்துறை நடுவர், எண்.2
சாத்தூர்